[30th March 1966

மற்றவர்கள் அனுபவத்தில் இருந்து அபராதத் தீர்வைக்குட்பட்டு இருக்கிற நிலங்களின் விவரங்கள் இருக்கிறதா? அதைப்பற்றி சொல்ல முடியுமா?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

கிராம மணியக்காரர்கள் நியமனம்

*526 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் கிராமங்களில் உள்ள பரம்பரை மணியக்காரர் பதவிகளை மாற்றி தகுதி அடிப்படையில் நியமிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

கனம் திரு. வெ. ராமையா : ஆம்.

திரு. செ. மாதவன் : ஸார், இந்திய தலைமை நீதி மன்றம் இது பற்றி ஒரு தீர்ப்பு வழங்கி நீண்ட நாள் ஆகிவிட்டது. இதைப் பரிசீலிக்க ஒரு காபினெட் சப்-கமிட்டி போட்டு பரிசீலிக்கப்படும் என்று பல ஆண்டுகளுக்கு முன் இந்த மன்றத்தில் சொன்னார்களே, அந்த காபினெட் கமிட்டியின் கதி என்ன ஆயிற்று?

கனம் திரு. வெ. ராமையா : கதி நல்ல கதிதான். காபினெட் சப்-கமிட்டி இந்தப் பிரச்னை மட்டுமல்ல, அதோடு பல பிரச்னைகள், நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய வில்லேஜ் ஆபீஸர்களுடைய வேலை, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியம், கொடுக்க வேண்டிய மரியாதை எல்லாவற்றையும் பூர்ணமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்தார்கள். அந்த அடிப்படையில் பல வசதிகளைச் செய்துகொடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பதவியை நிரந்தரமாக பரம்பரையாக உள்ளவர்களுக்குக் கொடுப்பது ஒரு பிரச்னை. இருக்கிற பிர்க்கா, வில்லேஜிலில் மாற்றி அமைத்து இப்போது இருக்கக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டுமென்று போர்டு ஆஃப் ரெவின்யூவிலிருந்து ப்ரொபோஸல் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பற்றியும் அண்மையில் முதல் அமைச்சர் அவர்கள் இவர்களுடைய மாநாட்டில் பேசும்போது எல்லாவற்றையும் பரிசீலித்து ஒருவருக்கும் பாதகம் இல்லா முறையில் செயல் திட்டம் உருவாக்கப் போவதாகச் சொன்னார்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா : இப்போது கேள்வி பரம்பரை பாத்தியத்தைப் பொறுத்தது. சுப்ரீம் கோர்ட்டில் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தீர்ப்பு வந்த பிறகு புதிதாக நியமனம் செய்கிறவர்களை எந்த அடிப்படையில் நியமனம் செய்வது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது வரையில் எங்கேயாவது வேக்கன்ஸி வரும் பட்சத்தில் நியமனம் செய்து கொண்டிருக்கிறோம்.